பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 10 2024 7 15

செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ரஷ்யா – உக்ரைன் போருக்கு அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும் என இந்தியா விரும்புவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி, ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினிடம் தெரிவித்துள்ளார்.
2. நீதிமன்ற ஆய்வுக்கு உட்படாத வகையில் தெளிவான சட்டங்களை மாநில சட்டமன்றங்கள் நிறைவேற்ற வேண்டுமென உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.
3. இந்தியாவும் - சிங்கப்பூரும் தானியங்கி மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு செய்துள்ளன.
4. வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுமண்டலம் டானா தீவிரப் புயலாக வலுப்பெறக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று ஒடிசா அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ரஷ்யா – உக்ரைன் போருக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி, ரஷ்ய அதிபர் திரு விளாடிமில் புட்டினிடம் தெரிவித்துள்ளார்.

16-வது பிரிக்ஸ் உச்சிமாநாட்டையொட்டி ரஷ்யாவில் கஸான் நகரில் ரஷ்ய அதிபரை சந்தித்து பேசிய பிரதமர், மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அமைதியும், அரசியல் நிலைப்பாடும் திரும்புவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்றும் கூறினார்.

சமரச தீர்வு காண்பதற்கு தேவையான ஒத்துழைப்பை இந்தியா அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா — ரஷ்யா இடையேயான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு நடவடிக்கைகள் குறித்தும் திரு நரேந்திரமோடி, திரு விளாடிமிர் புட்டினுடன் பேச்சு நடத்தினார்.

பிரிக்ஸ் மாநாட்டையொட்டி மிகவும் அழகிய கஸான் நகருக்கு வந்துள்ளது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் திரு நரேந்திரமோடி கூறினார்.

இநதியாவுடன் நீண்டகால வரலாற்று தொடர்புடைய கஸான் நகரில் அமையவுள்ள புதிய இந்திய தூதரகம் மேலும் இந்தியாவுடனான நட்புறவை வளர்க்கும் என்று பிரதமர் தெரிவித்தார்.

15 ஆண்டுகளுக்கும் மேலாக தனித்துவமிக்க அடையாளத்துடன் திகழும் பிரிக்ஸ் கூட்டமைப்பில் மேலும் பல நாடுகள் இணைய ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கஸானில் இந்திய தூதரகம் அமைக்க இந்தியா முன் வந்துள்ளதை வரவேற்பதாக ரஷ்ய அதிபர் தெரிவித்தார்,

முன்னதாக பிரதமர் திரு நரேந்திரமோடி இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடினார்.

கஸான் நகரில் தமக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பான வரவேற்பு குறித்து தெரிவித்த பிரதமர், இந்திய கலாச்சாரம் உலகெங்கிலும் விரிவடைந்திருப்பதை தாம் பார்க்க முடிவதாகவும் கூறினார்.

இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள திரு நரேந்திரமோடி, நாளை தொடங்கும் பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்கிறார்.

இது தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினுடனான சந்திப்பு மிகவும் சிறப்பாக இருந்தாகத் தொவித்துள்ளார்.

இந்தியா — ரஷ்யா இடையேயான நட்புறவு ஆழமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

ரஷ்ய அதிபருடனான சந்திப்பின்போது இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியாவும் - சிங்கப்பூரும் தானியங்கி மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு செய்துள்ளன.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இரு நாடுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர்களுக்கான பேச்சுவார்த்தையில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங், சிங்கப்பூர் அமைச்சர் திரு **Ng eng hen** -வும் கலந்து கொண்டனர்.

இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை வளர்ந்து வருவது குறித்து இரு தலைவர்களும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இணையதள பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

வரும் ஐந்து ஆண்டுகளுக்கு இருநாடுகளும் இணைந்து இருதரப்பு கூட்டு ராணுவ பயிற்சியை மேற்கொள்வது என்றும் இந்த பேச்சுவார்த்தைகளின்போது முடிவு செய்யப்பட்டது.

ஆசிய மண்டலத்தில் அமைதி மற்றும் அரசியில் நிலைப்பாட்டிற்காக இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகளை சிங்கப்பூர் வரவேற்பதாகவும் அந்நாட்டு அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவில் கிழக்கத்திய வெளியுறவுக் கொள்கை கொண்டுவரப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவடைந்திருப்பதையொட்டி, சிங்கப்பூர் - இந்தியா பாதுகாப்புத்துறைக்கான பேச்சுவார்த்தை நடைபெறுவது அரசியல் முக்கியத்துவம் பெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

நீதிமன்ற ஆய்வுக்கு உட்படாத வகையில் தெளிவான சட்டங்களை மாநில சட்டமன்றங்கள் நிறைவேற்ற வேண்டுமென உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்திநகரில் இன்று நடைபெற்ற அம்மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் பயிலரங்கில் பேசிய அவர், சட்ட மசோதாக்கள் அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்த பிறகே தெளிவாக எழுதப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

முறையாக ஆய்வு செய்த பின் அவையில் தாக்கல் செய்து சட்டங்கள் நிறைவேற்றப்படுமானால், நீதிமன்றம் தலையிடுவதற்கான வாய்ப்புகள் கணிசமாக குறையும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயக் கட்டமைப்பின் வலிமையை இது உறுதி செய்யும் என்றும் அவர் கூறினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் புதிய சட்டங்களை வரைவதற்கான பயிற்சியில் ஈடுபட வேண்டுமென்று அவர் அறிவுறுத்தினார்.

சட்ட மசோதாக்கள் தெளிவாகவும், நியாயமானதாகவும், அனைத்து சூழ்நிலைகளிலும் கடைபிடிக்க ஏதுவானதாகவும் அமைய வேண்டுமென்றும் திரு அமித்ஷா கூறினார்.

இந்நிகழ்ச்சியில் குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்தர் பட்டேல், சட்டப்பேரவைத் தலைவர் திரு சங்கர் சௌத்திரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

கடந்த ஆறு மாதங்களில் பி எஸ் என் எல் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை 75 லட்சத்திலிருந்து ஒரு கோடியே எட்டு லட்சமாக உயர்ந்துள்ளது என்று மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பி எஸ் என் எல்-லுக்கான புதிய இலட்சனை மற்றும் ஏழு புதிய சேவைகளை தொடங்கி வைத்து பேசிய அமைச்சர், இந்தியா உள்ளிட்ட ஆறு நாடுகள் மட்டுமே உலகில் நான்கு-ஜி தொழில்நுட்பத்துக்கான கட்டமைப்பை உள்நாட்டு தொழில்நுட்பம் கொண்டே வடிவமைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

விரைவில் ஐந்து-ஜி தொழில்நுட்பத்தை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.,

பி எஸ் என் எல் புதிய இலட்சனை வலிமை, நம்பிக்கை மற்றும் தடையில்லா தகவல் தொடர்பை உள்ளடக்கி இருப்பதாகவும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

[]<<<>>>[]

மகாராஷ்ட்ரா மாநில சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

மகாராஷ்டிராவில் மொத்தம் உள்ள 288 தொகுதிகளுக்கும் ஒரேகட்டமாக அடுத்த மாதம் 20-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

அம்மாநிலத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய வரும் 29-ஆம் தேதி கடைசி நாளாகும்.

ஜார்கண்ட் மாநிலத்தில் இரண்டாம் கட்டமாக 38 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 20-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய 29-ஆம் தேதி கடைசி நாளாகும்.

[]<<<>>>[]

கர்நாடகாவில் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகையை ஆளும் காங்கிரஸ் அரசு தங்கள் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்துக்கு பயன்படுத்துவதாக பிஜேபி தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளது.

அம்மாநில பிஜேபி தலைவர் திரு விஜயேந்திரா புதுதில்லியில் தேர்தல் ஆணையத்திடம் இந்த புகாரை அளித்த பின் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுமண்டலம் டானா தீவிரப் புயலாக வலுப்பெறக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இது நாளை மறுநாள் இரவு ஒடிஸா மாநிலம் பூரிக்கும் - மேற்குவங்க மாநிலம் சாஹர் தீவுக்கும் இடையே கரையைக் கடக்கக்கூடும் என்று அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --- 35 செகண்ட்*

டானா புயல் எச்சரிக்கை காரணமாக மேற்குவங்க மாநிலத்தில் ஒன்பது மாவட்டங்களில் உள்ள பள்ளிக் கல்லூரிகளுக்கு நாளை முதல் மூன்று நாட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஒடிசா அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

ஒடிஸாவில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

**Basel** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் ஆல்பனோ ஒலிவெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 3-6, 7-5, 10-8 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் **Jean Julien rojer** - இங்கிலாந்தின் **Joe Salisbury** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஜோஹர் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

மலேசியாவில் இப்போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.

**[]<<<>>>[]**

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தெலுகு அணி – ஜெய்பூர் அணியையும், உத்தரப்பிரதேசம் - பெங்களுரு அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**